# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **திருமதி. D.ஜான்சி ராணி, MBA., LLM.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**ஆத்தூர்.**

2026–ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 05–ஆம் நாள், வியாழக்கிழமை

## இ.ம.எண்.16/2026 இன் அ.வ.எண்.194/2004

1. செல்லம்மாள் (இறந்தவர்)
2. இளையப்பன் ... மனுதாரர்கள்/1, 2 வாதிகள்

/எதிராக/

1. செங்கோடன் ... எதிர்மனுதாரர்/3–ம் வாதி
2. கைலப்ப கவுண்டர் (இறந்தவர்)
3. நல்லம்மாள் (இறந்தவர்)
4. குப்புசாமி (இறந்தவர்)
5. நடேசன்
6. சரோஜா
7. மணி (எ) பெருமாயி (இறந்தவர்)
8. தங்கம் (எ) பார்வதி
9. சரோஜா (இறந்தவர்)
10. P.கலைசெல்வி
11. K.பழனிவேல்
12. S.வேல்முருகன்
13. A.நீலாவதி . . . எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, 02.02.2026–ம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில்

வழக்கறிஞர் திரு.R.ராம்சுந்தர் அவர்கள் ஆஜராகியும், 1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.L.தயாளன் அவர்கள் ஆஜராகியும், 5 மற்றும் 6–ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.சந்திரசேகரன் அவர்கள் ஆஜராகியும், 10 மற்றும் 11–ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ரவிசந்திரன் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4, 7 மற்றும் 9–ம் எதிர்மனுதாரர்கள் இறந்த நிலையிலும், 12 மற்றும் 13–ம் எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினர்களாக உள்ள நிலையிலும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உத்தரவு

மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவை வாதிகள் தரப்பு 1ம் சாட்சியை மறுதிறவு செய்து (Reopen) ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

2. **மனுதாரர்கள்/1, 2 வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :**

மனுதாரர் மேற்படி வழக்கில் 2–வாதி, 1–ம் எதிர்மனுதாரர் தனது சகோதரர் என்றும், இவ்வழக்கு பாகப்பிரிவினை தாக்கல் செய்யும் போது தன்னுடனும், தனது தாயாருடனும் இணைந்துகொண்டதாகவும், தற்போது விரோத மனப்பான்மையின் காரணமாக கைலப்ப கவுண்டர் வாரிசுகளான பிரதிவாதிகளுடன் சேர்ந்துள்ளதாகவும், எனவே பிரதிவாதிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளதாகவும், எனவே 1ம் எதிர்மனுதாரருக்கு வழக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றும், அதை நிரூபிக்க வழக்கிற்கு முக்கிய ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாகவும், ஆகவே, வாதிகள் தரப்பு 1ம்

சாட்சியை (PW1) மீண்டும் அழைத்து விசாரிக்க வழக்கை மீண்டும் திறக்க வேண்டியது அவசியம் என இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **1–ம் <u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :</u>**

மனுதாரர் கூறியுள்ள அனைத்து சங்கதிகளும் பொய்யானவை என்றும், மனுதாரர் இவ்வழக்கின் 2ம் வாதி. 1–வது பிரதிவாதி கைலப்ப கவுண்டர் வாரிசுகளுடன் சேர்ந்தார் என்று கூறுவது பொய் என்றும், பிரதிவாதிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளித்ததாகக் கூறுவது தவறானது. மனுதாரர் தாக்கல் செய்யும் புதிய ஆவணங்களை வழக்குகிற்கு பொருந்தாது என்றும் 12.05.2003 தேதியிட்ட ஆவணம், வழக்கு தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து முன்னதாகவே வெளியிடப்பட்ட ஆவணமாகும் என்றும், ஆனால் மேற்கண்ட ஆவணங்கள் வாதத்துடன் சேர்த்து சமர்ப்பிக்கப்படவில்லை என்றும், ஆவணங்கள் வழக்கு சொத்துக்களுக்கு பொருத்தமானவை அல்ல என்றும், எனவே இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

4. **<u>5–ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 6–ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :</u>**

மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்யும்போது அவரது தரப்பு சாட்சியத்திற்கான பிரமாணப்பத்திரிக்கை மற்றும் ஆவணங்களினை இம்மனுவுடன் இணைத்து தாக்கல் செய்யவில்லை என்றும், மேற்படி மனுவினை காலம் தாழ்த்தும் நோக்கத்துடன் தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி வழக்கில் வாதிகள் தரப்பில் சாட்சியம் அளிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டும், 4,5 பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியம் அளிக்கப்பட்டு மேற்படி சாட்சியத்தினை வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டும், மேற்படி 9 மற்றும் 10 பிரதிவாதிகளுக்கு எதிராக மேற்படி வழக்கானது ஒருதலைபட்சமாக தள்ளுபடி

செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி வழக்கானது இருதரப்பிலும் வாதத்திற்காக வாய்தா போடப்பட்டு, வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் வாதம் செய்யப்பட்டு தீர்ப்பிற்காக வாய்தா போடப்பட்டியிருந்ததாகவும், மேற்படி வழக்கு நிலுவையில் இருக்கும் நிலையில் 9 மற்றும் 10 பிரதிவாதிகளுக்கு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டியிருந்தனை ரத்து செய்யக் கோரி மனு தாக்கல் செய்து பதிலுரை தாக்கல் செய்திருந்தார்கள் என்றும், மேற்படி வழக்கில் 9 மற்றும் 10 பிரதிவாதிகள் வாதி தரப்பில் வாதிகளினை மறு விசாரணை செய்வதற்காக மனு தாக்கல் செய்து, மேற்படி மனுவானது அனுமதிக்கப்பட்டு 2ம் வாதியினை குறுக்கு விசாரணை செய்து மீண்டும் வழக்கானது இரு தரப்பு வாதத்திற்காக வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், மேற்படி வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுது மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்வது சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றும், மேற்படி மனுவினை காலம் தாழ்த்தும் நோக்கத்துடன் தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே இம்மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள்.

5. **<u>10 மற்றும் 11–ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :</u>**

1–ம் எதிர்மனுதாரர் மற்ற பிரதிவாதிகளுடன் சேர்ந்து செயல்படுகிறார் என்பது பொய் என்றும், அதனை மனுதாரர் நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், ஏற்கனவே விசாரணை முடித்து பலமுறை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட பின்பும் இந்த மனுவை காலம் தாழ்த்தும் ஒரு முயற்சியாக தாக்கல் செய்துள்ளதாகவும், வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட பின்பும் வேறு ஒரு வழக்கறிஞரை வைத்து வழக்கில் தன்னை சாட்சியாக விசாரித்து அனைத்து ஆவணங்களையும் குறியீடு செய்த பின்பும் மீண்டும் தனது தரப்பில் ஆவணம் தாக்கல் செய்ய வேண்டும் என பொய்யாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், இந்த மனு நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், இம்மனுவை

செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள்.

6. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

7. தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரர்கள் இம்மனுவில் கோரிய பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா?

8. மனுதாரர்கள் தரப்பில் சில முக்கிய ஆவணங்கள் தாக்கல் செய்ய வேண்டும் என்றும், எனவே காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணத்தை ஏற்று குறியீடு செய்ய வேண்டும் என இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். மாறாக எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் இம்மனுவை காலம் தாழ்த்தும் எண்ணத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும், ஏற்கனவே வாதி தரப்பு சாட்சியங்கள் முடிவடைந்துள்ள நிலையில் இம்மனுவை வேண்டுமென்றே தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் எனவும் எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

மனுவில் கூறப்பட்டுள்ள காரணங்களை அனுசரித்து வாதிகளின் தரப்பு வழக்கை நிரூபிக்க அவசியமான ஆவணங்களை வாதி தரப்பில் தாக்கல் செய்ய வாய்ப்பு அளிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது என்பதாலும், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்பதாலும், வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை பொறுத்து பிரதிவாதிகளுக்கு குறுக்கு விசாரணை செய்து கொள்ள வாய்ப்பு உள்ளதாலும் இம்மனுவானது கீழ்க்கண்ட நிபந்தனையுடன் அனுமதிக்கப்படுகிறது.

**<u>9. தீர்வு:</u>**

இறுதியாக இம்மனு நிபந்தனையின் பேரில் அனுமதிக்கப்பட்டு மனுதாரர்கள், 1ம் எதிர்மனுதாரர்/வாதிக்கு ரூ.400/-ம், 5, 6 மற்றும் 10, 11 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு தலா ரூ.400/-ம் ஆக மொத்தம் ரூ.2000/-ஐ இம்மனுவின் செலவுத்தொகையாக 07.02.2026ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் இம்மனுவாது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 09.02.2026.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026-ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 05-ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI
Digitally signed by D JANSIRANI
Date: 2026.02.05 18:37:08 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

1. <u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>

இல்லை

2. 1ம் <u>எதிர்மனுதாரர்/3ம் வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>

இல்லை

3. <u>எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>

இல்லை

D JANSIRANI
Digitally signed by D JANSIRANI
Date: 2026.02.05 18:37:15 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

**<u>கூ.மா.உ.நீ. ஆத்தூர்</u>**
அசல்/வரைவு/ உத்தரவு
இ.ம.எண்.16/2026 இன்
அ.வ.எண். 194/2004
நாள் : 05.02.2026